கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 20.00
மலர் - 09 டிசம்பர் - 2018 இதழ் - 94

## குறளமுதம்–93

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்–10 அறத்துப்பால் இனியவைகூறல்**

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்
இன்சொ லினதே அறம்

ஒருவரைக் கண்டபொழுதே, முகமலர்ச்சியோடு விரும்பி இனிதாக நோக்கி. பின்பு அவர் நெருங்கி வந்ததும், அகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுவதே அறமாம்.

# பனை வள உற்பத்திகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

## வடமாகாண கூ.அ.ஆணையாளர் திரு.பொ.வாகீசன் அவர்கள் தெரிவிப்பு



உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களிலே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று தமது அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றது. அங்கத்தவர்களுக்கும் சமூகத்துக்கும் பல நலத்திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றது. எதிர்காலத்தில் இச் சேவைகள் தொடர பனை வள உற்பத்திகள் அதிகரிக்கப்பட வேண்டும் என வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு.பொ.வாகீசன் அவர்கள் சமாசத்தால் நடாத்தப்பட்ட 96வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் தெரிவித்தார்.

கடந்த 20.10.2018இல் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி அதன் மாண்மியத்தை மக்கள் மத்தியில் வெளிக்கொணர்வதற்கான வழிகள் திறக்கப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டு முதல் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இக்கண்காட்சியும் விற்பனையும் நடைபெற்று வருகின்றது. அங்கே சங்கங்களின் உற்பத்திப் பொருட்கள் குறைவாகவே காணப்பட்டது. பனைவெல்லம், கல்லாக்காரம், பதநீர், பனாட்டு போன்ற உணவுப் பொருட்களின் கேள்விகள் கூடுதலாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. இத்தகைய பொருட்களை நவீனத்துவ முறையில் உற்பத்தி செய்து கவர்ச்சிகரமாக வெளியிட்டு கொண்டு வர வேண்டும். அடுத்த ஆண்டில் நடைபெறப்போகும் கண்காட்சியிலே சகல பனை தென்னை வள அபி.கூட் சங்கங்களும் இவ்வாறாக உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

மேலும் இவ்விழாவிலே 2017ம் ஆண்டில் சங்கங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பும் அங்கத்தவர், பணியாளர் மத்தியிலே நடாத்தப்பட்ட பல்வேறு வகையான போட்டிகளிலும் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகள், பல்கலைக்கழக அனுமதி உயர்கல்வி வாய்ப்பு பெற்றவர்களுக்காகவும், க.பொ.த(சா.த) பரிசில் 6A யுடன் கூடிய சகல பாடங்களிலும் சித்தி பெற்ற மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குமான பாராட்டும் பரிசில்களும் வழங்கப்பட்டு சிறந்த சங்கங்கள் கொத்தணிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு அங்கத்தவர், பணியாளர், மாணவர்களின் கல்வி, கலை, கலாசார, பொருளாதாரத்தை மேம்பாடு அடையச்செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தார்.

### பனம் பழம் பதனிடும் தொழிற்சாலை

50 தொழிற்சாலைகளை நிறுவும் தேசிய பாதீட்டு ஒதுக்கத்தின் கீழ் பனம்பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்றினை 2 மில்லியன் ஒதுக்கீட்டில் வேலணை பிரதேச செயலரின் வழிநடத்தலுக்கு அமைய வேலணை ப.தெ.வ.அ.கூ. சங்கத்தில் புதிய கட்டிட வேலைகள் இடம்பெற்று வருகிறது. இத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குட் பட்ட குடும்ப பெண்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதும், அவர்களது சமூக பொருளாதார மேம்பாட்டுக்கும் வழி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதான திட்டமாக இத்திட்டம் அமைந்துள்ளது. இத்துடன் சங்கமானது வரும் காலங்களில் பனம்பழ உற்பத்தியினூடாக வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களையும் பெற்று ஒரு தன்னிறைவான சங்கமாக மிளிர்வதற்கு ஏதுநிலை ஏற்பட்டுள்ளது.

# கற்பகம் பத்திரிகை தொடர்ச்சியாக வெளிவர சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

கற்பகம் பத்திரிகை தொடர்ச்சியாக வெளிவர சங்கங்கள் தமது செயற்பாடுகள் தொடர்பான செய்திகளை வழங்கவேண்டும். இதற்கு கல்வி உத்தியோகத்தர்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டுமெனவும் கடந்த 12.11.2018இல் நடைபெற்ற சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலில் சமாசத் தலைவர் திரு.வ.தெய்வேந்திரம் அவர்கள் தெரிவித்தார். எமது சங்கங்களின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் அங்கத் தவர்கள் தெரிந்திருக்கவேண்டும் எனவே தான் இவ்வாறான செய்திகளை தொடர்ச்சியாக அனுப்பி ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்

2019ம் ஆண்டுக்கான அங்கத்தவர், பணியாளர் சகாய நிதி யம் கட்டுப்பணம் 31.12.2018க்கு முன்னர் செலுத்த வேண்டும் எனவும், 25.12.2018க்கு முன்னர் ஓய்வூதியர் வாழ்வை உறுதிப் படுத்தும் படிவத்தையும் அனுப்ப வேண்டும் எனவும் அங்கத்துவ நிறுவனங்களுக்கு அறிவிக்கப்- பட்டுள்ளது. இதனை உரிய காலத்தில் அனுப்பி வைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# சாவகச்சேரியின் 96வது சர்வதேச கூட்டுறவு தின விழா

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 96வது சர்வதேச கூட்டுறவு தின விழாவினை கடந்த 10.11.2018 திகதி சிறப்பாக நடாத்தியது.

சங்கத்தின் தலைவர் திரு.வ. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய திரு.பொ.வாகீசன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர் திரு.பொ.செல்வராசா, யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலாளர் திருமதி. வே.செல்வரத்தினம் மற்றும் தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ச. அரியநாயகம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. நா. குமணதாசன், வடமராட்சி கொத்தணியின் தலைவர் திரு. செ.காந்தராசா, பனை வள நிறுவனங்களின் ஸ்தாபகர் திரு.க. நடராசா, கொடிகாமம் ப.தெ.வ.அ. கூ.சங்கத்தின் தலைவர் திரு. க. செல்வேஸ்வரன் மற்றும் பளை ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் தலைவர் திரு. க. இராசதுரை அவர்களும் இவர்களுடன் பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் முகாமையாளர் மற்றும் அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் பொதுமுகாமையாளரும் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர்.

முதன்மை விருந்தினரினால் கூட்டுறவுக் கொடியேற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் விழாவில் முன்பள்ளி மழலைகளின் கண்கவர் கலை நிகழ்வுகள் மற்றும் ஊழியர்களின் பாடல்களுடன் ஓய்வு பெற்ற உறுப்பினர், கிளை ரீதியான சிறந்த உறுப்பினர், சங்கத்தின் சிறந்த ஊழியர் கௌரவிப்பு, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான உதவுதொகை, க.பொ.த. சாதாரணதரம் சித்தி பெற்றவர்களுக்கான உதவுதொகை, பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கான உதவு தொகைகள் என்பவற்றுடன் சங்கத்தின் ஆளுமையின் கீழ் இயங்கும் 10 முன்பள்ளிகளினதும் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளின் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் சமாசத்தின் விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான நினைவுக் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டது. மேற்படி நிகழ்வுகளின் சில பதிவுகளைக் கீழே காணலாம்.





**கற்பகம்**

விலைவாசி அதிகரிப்பின் காரணத்தினால் கற்பகம் பத்திரிகையின் விலையும் 10.00 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.



## சிந்தனைத்துளி

"நாம் நல்லவர்கள் என்று பெயர் எடுப்பதை விட நல்ல வர்களாக வாழ்வதே மேலானது."

## கற்பகக்கரு

### நவீன தொழில்நுட்பம்

புனிதமானதும் வலிமை மிக்கதுமான கூட்டுறவு நிறுவனங்களில். பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள் உறுப்பினர்களுடன் நேரடித்தொடர்பை பேணி வருகின்றன. உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கொள்வனவு செய்து சந்தைப் படுத்துவதுடன், உப உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்து வருகின்றது. இவ்வாறான உற்பத்திகளில் பனை வெல்லம், கல்லாக்காரம், பனஞ்சீனி, பனாட்டு, பாணிப்பனாட்டு, பனங்கிழங்கு, ஒடியல், புளுக்கொடியல், ஒடியல்மாவு, புளுக்கொடியல் மாவு, பனங்கோடியல் என்பன முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளன. இந்நிலையில் தற்காலத்தில் பனையிலிருந்து பெறப்படும் உணவுப் பண்டங்களுக்கு மிகுந்த வரவேற்பு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவிவரும் இக்கால கட்டத்தில் உயர்சந்தை வாய்ப்பைப் பெறுவதற்கும் உறுப்பினரின் பொருளாதாரத்தை மேம்படுத்து வதற்கும் ஏற்றவகையில் நவீன தொழில்நுட்ப இயந்திர சாதனங்களை உற்பத்தி தொழிற் சாலைகளில் பொருத்திதரமானதும் அதிகளவானதுமான உற்பத் திகளை மேற்கொண்டு பொதியிடல் முறையிலும் கவர்ச்சிகளை ஏற்படுத்திநுகர்வோரின் தேவை களை அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுத்தல் சிறந்தது.

பனம்பண்டங்களை நீண்ட காலத்துக்கு பாதுகாக்க கூடியவாறான ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றுள் நவீன தொழில்நுட்பங்களை புகுத்தி தரமான உற்பத்திகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை தீட்டி அவற்றினை நடைமுறையில் சாத்தியமாக்குவதன் மூலம் ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு பலமான ஒரு கட்டுமானத்தை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களால் ஏற்படுத்த முடியும்.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" ஆசிரியர்

## வெல்ல உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா

அங்கத்தவர்களின் உற்பத்தியை அதிகரித்து அவர்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கோடு கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தேசிய நல்லிணக்க அமைச்சின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து எமது சங்கத்தின் சமரபாகு பகுதியில் அமைந்துள்ள காணியில் கடந்த 24.10.2018 அன்று புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் திரு.ஈ.தயாரூபன், உதவி பிரதேச செயலர், அப்பகுதி கிராமஅலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர், சங்க தலைவர், பொதுமுகாமையாளர், நிர்வாகிகள், பணியாளர்கள், அங்கத்தவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர். என கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துளள்ளார்.



**அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இயங்கும் கதிரொளி முன்பள்ளியின் சிறுவர் தினமும் ஆசிரியர் தினமும் 06.10.2018ஆம் திகதி சிறப்பாக கொண்டாடப்பட்ட நிகழ்வுகளின் பதிவுகள்.**





## மனித நேயமிக்கது கூட்டுறவு

எல்லோரையும் விழுங்கி ஏப்பம் விடும்
எம் மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியில்
புனிதமான கொள்கைகள் வளர்த்து நின்று
புதுவகைத் திட்டங்கள் தீட்டி உடனுக்குடன்
உயரிய செயல்பல செய்திடும் கூட்டுறவின்
உயிரோட்டம் என்றுமே மனித நேயமிக்கது.

முட்டி மோதி மூச்சுத் திணறி வறியவர் உழைப்பை
முழுமையில் சுரண்டும் முதலாளித்துவத்திற்கு - இன்று
முடிவினைக் கட்டி உயரிய கொள்கைகள் வகுத்து
முயன்று முன் சென்று சேவை செய்யும் கூட்டுறவு
முப்பொழுதும் எப்பொழுதும் மனித நேயமிக்கதே.
உழைத்திடுவொர் உயர்ந்திடவே - பாரினில்
உயர்வாய் கட்டிய உன்னத கூடிது.

தேவைகள் அறிந்து சேவைகள் செய்திட
தேவதை போலிங்கு பாரினில் தோன்றிய
அட்சய பாத்திரமாய் அமிர்தம் சொரிந்திடும்
அச்சுரம் கொண்ட கூட்டுறவு இயக்கம்
அளப்பரிய நல்ல சேவைகள் செய்திங்கு
மானிடர் வாழ்வினை மகத்துவம் ஆக்கிடும்
மனித நேயமிக்கது கூட்டுறவு

ஒருவர் பலருக்காய் பலர் ஒருவருக்காய்
ஒற்றுமையுடனும் விடாமுயற்சியுடனும்
ஒப்பற்ற பல சேவைகள் செய்திட
ஓங்கி வளர்த்திட்ட கூட்டுறவில் - இன்று
உறுப்பினர் நலன் காக்க நலத்திட்டங்கள் வகுத்திங்கு
உன்னத சேவையை உயர்வாய் வழங்கிடும்
மனித நேயமிக்கது கூட்டுறவு

**- ம. கார்த்தீபன்**
அச்சுவேலி. ப.தெ.வ.அ.கூ.சங்கம்

# வடமாகாண ப. தெ. வள அ. கூ. சங்கங்களின் சமாசத்தின்



















# 96வது சர்வதேச கூட்டுறவு தின விழா நிகழ்வின் பதிவுகள்






















# வேலணை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் 96வது சர்வதேச கூட்டுறவு தின விழா நிகழ்வின் பதிவுகள்

















# தெல்லிப்பளை ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் தலைமை அலுவலக புதிய கட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வின் பதிவுகள்





## அதிஸ்டலாப சீட்டுழுப்பு

யாழ்.மா.ப.தெ.வ.நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவு சங்கத்தினால் 16.11.2018ஆம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசம், தொத்தணி, மற்றும் சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் முன்னிலையில் அதிஸ்டம் பார்க்கபட்டது. இதன் மூலம் பின்வரும் இலங்கள் அதிஸ்டஇலக்கங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**01வது பரிசு** - ரிக்கட் இல 15029 **02வது பரிசு** - ரிக்கட் இல 10765 **03வது பரிசு** - ரிக்கட் இல 10949

**50 ஆறுதல் பரிசு பெற்ற ரிக்கட் இலக்க விபரங்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 03232 | 07940 | 15417 | 03073 | 03569 | 06665 | 06091 | 04941 |
| 06252 | 01649 | 10098 | 09252 | 18053 | 18736 | 15790 | 04906 |
| 17090 | 06663 | 04003 | 08877 | 12736 | 16826 | 04669 | 19937 |
| 04663 | 14425 | 08943 | 16603 | 06900 | 06601 | 19236 | 16788 |
| 08006 | 11267 | 06006 | 15584 | 15422 | 18502 | 04027 | 08426 |
| 14586 | 04426 | 04624 | 18606 | 19426 | 04064 | 06673 | 16532 |
| 01768 | 04503 | | | | | | |

இச்சீட்டிழுப்புக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நலன்புரி சங்கத்தின் சார்பில் தலைவர் திரு. க.சுதாகரன் அவர்கள் நன்றிகளை தெரிவித்துள்ளார்.


**2019**
**வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டிகள்!**

எமது சமாசப் பதிப்பகத்தில் 2019ம் ஆண்டுக்கான வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டிகள் தற்போது அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டு விற்பனைக்கு தயராகி வருகின்றன.

18"×12" அங்குல அளவுகொண்ட 12 மாதங்களுக்கும் 12 தாள்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட இந் நாட்காட்டிகளின் மேல் பகுதியில் தங்கள் நிறுவனங்களின் விளம்பரங்களை அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் தடிப்பான அட்டைகளில் தங்கள் நிறுவனத்தின் விளம்பரங்களை வண்ணமயமாக (4 கலர்) அச்சிட்டும் பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
இல.52, சோமசுந்தரம் லேன்,சுண்டுக்குளி. தொ.பே: 0212225072

## நாம் எங்கே?

உலகில் வாழ் மக்கள் இனத்துள் தமிழ் மக்களுக்கென்று ஒரு தனித்துவமான சிறப்பு மிக்க பண்பாட்டு அம்சங்களுண்டு. அதாவது தமிழினம் தனக்கென்ற கலாச்சார விழுமியங்களால் தனக்கென ஒரு உன்னத இடத்தைப்பெற்ற இனமாக மிளிர்வதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. கூட்டுக் குடும்ப வாழ்க்கைக்கும் பகிரிந்துண்டு பல்லுயிரோம்புதலுக்கும் நமது இனம் என்றும் தளைத்த இனமாக இருந்ததில்லை. கல்விக்கும், விவசாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்த நாம் வெளிநாட்டு மோகத்தால் அனைத்தையும் இழந்து, நாகரீக வாழ்க்கைக்கு அடிமைப்பட்டு அல்லல்படுகின்றோம்.

இருப்பவனும் சரி, இல்லாதவனும் சரியொருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற மாயைத் தோற்றத்தை உருவாக்கி வாழ்க்கை என்னும் சக்கரத்தை உருட்ட முடியாது விலைமதிப்பற்ற உயிர்களை மாய்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையேன்? திட்டமிட்டு நமது வாழ்க்கையை நிர்ணயிக்காமையே! ஒரு ரூபாவாயினும் அதை எவ்வழியில் செலவு செய்ய வேண்டும் என்ற திட்டம் நம்மிடமிருந்தால் அந்த ஒரு ரூபாவும் ஓராயிரம் ரூபா செய்யும் வேலையைச் செய்யும். இது நம்மில் யாருக்குப் புரியப்போகிறது?

நமது பெற்றோர் சாதாரணமாக 5ம் ஆண்டு பரீட்சையையே படித்து பட்டம் வாங்கிய அளவுக்கு பெரிது படுத்தி மாணவச் செல்வங்களை சொல்லவொணா நிலைக்கு தள்ளி விடுகின்றனர். இதனால் அந்த சின்னஞ்சிறுசுகளின் உள்ளங்களில் தன்னாலாகாத தன்மையை உண்டு பண்ணி அந்த சிறுவயதிலேயே அவர்களை விபரீத முடிவுக்கு தள்ளி விடுகின்றனர். அவர்களின் வாழ்க்கையை நிர்ணயிப்பது 5ம் தர கல்வியல்ல, அது எங்கோ இருக்கிறது. ஏன்? 5ம் தர பரீட்சை சித்தியடையும் பிள்ளை தெருவில் நிற்க சித்தியடையாத பிள்ளை மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ, ஆசிரியராகவோ பணிபுரியவில்லையா? இந்நிலையை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்தால் எம்மினம் அன்றைய ரம்மியமான வாழ்க்கை நிலையிலேயே இருந்திருக்கும்.

பாடசாலை மாணவர்களை எடுத்து நோக்குமிடத்து ஆசிரியர் சொற்கேளாமை, பெரியோரை மதியாமை, கீழ் படியாமை போன்ற நற்பண்புகளை மறந்த நிலையிலேயே காணப்படுகின்றார்கள்.

இந்நிலை தொடருமானால் கற்பிப்பதற்கு யாருமே முன்வரா நிலையேற்பட்டு மாணவ சமூகம் சின்னாபின்னமாகும் நிலையே உருவாகும். பெற்றோர் இப்பிள்ளைகள் மீது கவனமெடுத்து நல்லவற்றை சொல்லிக்கொடுத்து வளர்த்து ஆளாக்க வேண்டும். இதை விட்டு அம்மா, அப்பா, பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு செல்போனுடன் பொழுதைப் போக்கினால் காட்டுமிராண்டித் தனமான ஒரு சமூகத்தை பார்த்துக்கொள்ள முடியும்.

சமூகம்; சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் அம்மா, அப்பா, அக்கா, தங்கை, தம்பி என்ற நிலை ஒவ்வொருவர் மனதிலும் உருவாக வேண்டும். அப்படி உருவாகுமிடத்து அம்மாவுக்கும் பிள்ளைக்கும் என்ன வித்தியாசம் என்பது விளங்கி சமூகச் சீர்கேடுகள் உருவாவதை தவிர்க்க முடியும். தந்தைக்கும், மகளுக்குமிடையிலுள்ள வித்தியாசம் என்னவென்பதே தெரியாத நிலைக்கு இன்றைய போதைப்பொருட்கள் எம்மவர் மத்தியில் நடனமாடி அவர்களை சுய புத்தியற்றவர்களாகவும், ஏதிலிகளாகவும் மாற்றி சமூகத்தில் அவர்களை ஒதுக்கி வைக்கும் நிலைக்கு கொண்டுவந்து விடுகிறது.

இந்நிலைகள் எல்லாம் நம் மத்தியிலிருந்து மாறவேண்டும். திருடராய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. அதுபோல நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்பட்டால் நம்மினம் மீண்டும் தன்னிலை மாறாத இனமாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

**செ. விஜயலட்சுமி**
**வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

**தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் 96 வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவின் பதிவு.**



## தொழிற் பாதிப்பு நிவாரணம் வழங்கல்

தொடர்ச்சியாக பெய்து வந்த மழை, மற்றும் கஜா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட உற்பத்தியாளருக்கும், பணியாளருக்கும் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 23.11.2018 அன்று தொழிற் பாதிப்பு நிவாரணம் வழங்கியுள்ளது. இதன்போது அரிசி, மாவு, சீனி, பருப்பு, தேயிலை, பால்மா, சவர்க்காரம், சண்லைட் பவுடர், என்பன மொத்தமாக ரூபா 613634.00 பெறுமதியில் வழங்கப் பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை யா.மா.கூ.ச.அச்சகத்தால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டது.